அ.வ.எண் : 145/2017

தேதி : **02 /12/2020**

பெயர் : துரைசாமி

நேரம் : முற்பகல் 10.48 முதல் 11.04 வரை.

<u>வா..சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் 1997ம் ஆண்டு தாவா சொத்தினை விலைக்கு பெறும்பொழுது தாவா சொத்திற்கான உரிய ஆவணங்களையும் சொத்துவிவரங்களையும் முழுமையாக தெரிந்துகொண்டுதான் வாங்கினேன். 1997ம் அண்டு தாவா சொத்தினை விலைக்கு பெற்ற பின்னிட்டு 2003ல் தான் தாவா சொத்திற்கு பட்டா பெற்றுள்ளேன். காலதாமதமாக பெற்றதற்கு காரணம் ஏதாவது உள்ளதா என்றால் அது கிராம நிர்வாக உதவியாளர் காலதாமதமாக பட்டா வாங்கி கொடுத்தார். அவருடைய பெயரும் எனக்கு தெரியாது. தாவா சொத்து குறித்து இந்த வழக்கை தவிர வேறு ஏதேனும் வழக்கு தொடர்ந்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது என்னுடைய மகனுக்குதான் தெரியும். தாவா சொத்திற்கான மூலஆவணங்களை நான் எனது தரப்பு ஆவணமாக சான்றிட்ட நகலைத்தான் தாக்கல் செய்துள்ளேன். அதன் அசல் ஆவணங்கள் என்னிடத்தில் உள்ளனவா என்றால் உள்ளது. 12.06.2017 ம் தேதியில் தாவா சொத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக என்னுடைய வழக்கிலும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன். பிரதிவாதி தரப்பில் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால்

சுமார் 30 நபர்கள் கூட்டமாக வந்தார்கள். 30 நபர்கள் கூட்டமாக தாவா சொத்தில் வந்தது குறித்து காவல் நிலையத்தில் நான் ஏதாவது புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் மாகரல் காவல் நிலையத்தில் அன்றைய தினமே புகார் கொடுத்தேன். புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் ரசீது ஏதாவது காவல் நிலையத்தில் நான் பெற்றுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது என்னுடைய மகன் மணிகண்டன் என்பவருக்குதான் தெரியும்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.